# கிருபையுள்ள வார்த்தை

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

| Vol - 20 | January ஜனவரி | 2020 |
|---|---|---|
| ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/- |




## கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.

ஏசாயா 30:18


கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 6 |
| தனி நபர் வேத ஆராய்ச்சி | 7 |
| அடிப்படை வேதாகம ஆராய்ச்சி | 9 |
| சிறுவர்பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,
**R. ஆன்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

**ஞாயிறு**
**மதியம் 3:30 மணி**

செய்தியாளர்
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்


**ஞாயிறு காலை 6:45 மணி**

செய்தியாளர்
சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை**
**நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**

## சிறப்பு வேத ஆராய்ச்சி புத்தகங்கள் - தமிழில்





இந்த மூன்று சிறப்பு வேத ஆராய்ச்சி புத்தகங்களை பெற்று உங்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளரும்படி வேண்டுகிறோம்.


இப்புத்தகங்களின் ஆசிரியர் : சகோ. ஜெர்ரி பேட்ஸ் (USA)

விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

**கிருபையுள்ள வார்த்தை**

கர்த்தருக்காக நம்மை காத்திருக்க
ஊக்கப்படுத்தும் உன்னதரின் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International Vol. 100**

ஆசிரியர் உரை

# கர்த்தர் காத்திருப்பார் கர்த்தருக்கு காத்திருப்போம்!

P.C. பிலேமோன் ராஜா



**அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் எனது அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!**

நாம் அநேக காரியங்களுக்காக காத்திருக்கிறோம். பேருந்துக்காக, இரயிலுக்காக, சமையல் எரிவாயு (கேஸ் சிலிண்டர்)க்காக, ஆன்லைன்ல ஆர்டர் பண்ணி சாப்பிடவும் குறைந்தது அரைமணி நேரமாவது காத்திருக்க வேண்டும். இப்படி அநேக காரியங்களுக்காக அனுதினமும் நாம் காத்திருப்பதால், காத்திருத்தல் என்பது அன்றாட வாழ்வில் நமக்கு பழக்கமான ஒன்றாகிவிட்டது.

**ஏசாயா 30ம்** அதிகாரம் காத்திருத்தலைப் பற்றி பேசுகிறது, "ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.'' **(ஏசாயா 30:18).** இந்த வசனப்பகுதியில் கர்த்தர் தாம் காத்திருப்பதாகவும், மற்றும் தமக்காக தம்முடைய ஜனத்தை காத்திருக்க சொல்வதாகும் அறிந்துக்கொள்ள முடிகிறது. ஆகையால் நாம் காத்திருத்தலைப் பற்றி இந்த மாதம் வேதத்தில் இருந்து ஆராய்வோம்.

## கர்த்தர் காத்திருக்கிறார், மனந்திரும்பும்படி காத்திருக்கிறார்

**ஏசாயா 30:15** "நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்..."

நம்மை படைத்தவர் நமக்காக காத்திருக்கிறார். நாம் அவருக்காக காத்திருப்பது போல, அவரும் நமக்காக காத்திருக்கிறார். ஏன் காத்திருக்கிறார்? நாம் நம்முடைய பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்படியாக காத்திருக்கிறார்.

இச்சிறியரில் ஒருவரும் கெட்டுப்போவது உங்கள் பிதாவின் சித்தம் அல்ல **(மத் 18:14)** என்று ஆண்டவர் இயேசு சொன்னார். நாமெல்லாரும் மனந்திரும்பும்படியாக கர்த்தர் நீடிய பொறுமையோடே காத்திருக்கிறார் என அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்கிறார். "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."

சென்ற ஆண்டில் நம்மை வீழ்த்திய பாவங்களை, இந்த ஆண்டில் வீழ்த்தும்படியாக மனந்திரும்புவோம். மனந்திரும்புதல் என்பது தீர்க்கமானத்தின் வெளிப்பாடாக இருக்கிறது. இனிமேல் இதை (பாவத்தை) எப்பொழுதும் செய்யமாட்டேன் என்று ஒருவர் பாவத்திற்கு எதிராக எடுக்கும் பரிசுத்தமான முயற்சியாகும்.

நாம் பெற்ற பிள்ளைகள் எத்தனை இருந்தாலும், அத்தனையும் நன்றாக இருக்க வேண்டும் என்று நாம் ஆசைப்படுவோம், வேண்டுதல் செய்வோம் மற்றும் முயற்சியும் செய்வோம். பொல்லாதவர்களாகிய நாமே இப்படி செய்யும் போது, மகாபரிசுத்தமான இந்த பைபிள் கடவுள், அவர் படைத்த எல்லா மனிதர்களும் இம்மையிலும் மறுமையிலும் நன்றாக இருக்க வேண்டும் என சித்தங்கொண்டு உதவி செய்கிறார். **மத் 7:11** "ஆகையால், பொல்லதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"

மோசமான வாழ்க்கை வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற ஒவ்வொருவருமே, அந்த வழியிலிருந்து மனந்திரும்பும்படி கர்த்தர் காத்திருக்கிறார், மற்றும் அழைக்கிறார். ஏனெனில் துன்மார்க்க வழியில் நின்று ஒருவரும் கெட்டுப்போய்விடக்கூடாது என்பதே அவரது சித்தம்.

**எசேக்கியேல் 18:23,32** "துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

புதிய ஆண்டை புதிய மனதுடன் துவக்குவோம் நம்மை நாமே மறுரூபமாக்குவோம். அதுவே நாம் செய்யத் தக்க புத்தியுள்ள ஆராதனையாகும். "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." **ரோ. 12:1**

இளைய குமாரன் திரும்பி வர, திருந்தி வர காத்திருந்த தகப்பனைப் போல கர்த்தரும் காத்திருக்கிறார் **(லூக்கா 15:20)** அது பரலோகத்தில் பேரானந்தத்தை உண்டாக்கும் **(லூக்கா 14:7).** மனந்திரும்பாதவர்களை மனந்திரும்பும்படியாக தினந்தோறும் நற்செய்தியை நானிலமெங்கும் பரப்புவோம். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் போல வைராக்கியமாக பாடுபடுவோம் **(அப் 8:1–4).** நாம் மாத்திரம் இந்த வழியில் செல்லாமல், அநேகரை அழைத்துச் செல்கிறவர்களாக இருப்போம். அது நமது கடமையாகும் **(1கொரி 9:16).** மேலும் அப்படிச்செய்ய நாம் நமது இரட்சகருக்கு கடன்பட்டிருக்கிறோம் **(ரோமர் 1:16).** மேலும் அதுவே தேவ சித்தமாகும் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." **(1தீமோ 2:24).**

## கர்த்தர் இரங்கும்படியாக காத்திருக்கிறார்

**ஏசாயா 30:18** "ஆனாலும்உ ங்களுக்குஇ ரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்." நாம் கடவுளுக்காக காத்திருப்பது நம் இயலாமை. அவர் நமக்காக காத்திருப்பது அவரது அன்பு. அவர் நமக்கு இரங்கும்படியாக, அதாவது நம்மீது இரக்கம் செய்யும்படியாக காத்திருக்கிறார்.

அவருடைய இரக்கத்தை பற்றி சங்கீதக்காரன் தகப்பனைப் போல இரக்கம் செய்கிறார் என்கிறார் "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்." **(சங்கீதம் 103:13).** தீர்க்கன் எரேமியாவோ அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை என்கிறார். "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை." **(புலம்பல் 3:22).** வைத்தியனாகிய லூக்கா அந்த இரக்கம் தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது என்று சொல்கிறார் "அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்கு முள்ளது." **(லூக்கா 1:50).**

அந்த மகா மேன்மையான இரக்கத்தினை பெற்றுக்கொள்ள நாம் அவருக்கு பயந்து வாழவேண்டும் **(லூக்கா 1:50: சங் 103:13).** தீமையினை, அதாவது பாவத்தினை வெறுப்பது தான் கர்த்தருக்கு பயப்படுகிற பயமாக இருக்கிறது **(நீதி 8:13).** தீமையை வெறுக்க வேண்டும், அதே சமயத்தில் நன்மையை பற்றிக்கொண்டிருக்க வேண்டும் "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக; தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக் கொண்டிருங்கள்." **(ரோமர் 12:9).** மற்றும் நமது ஆண்டவர் இயேசு, அவ்விரகத்தை பெற நாமும் இரக்கம் செய்கிறவர்களாயிருக்க வேண்டும் என்றார் **(மத் 5:7, 18:33).** அந்த இரக்கம் நமக்கு நியாயத்தீர்ப்பில் மேன்மை பாராட்டலாக இருக்கிறது **(யாக் 2:13).**

தேவனுக்கு பயப்படுகிற பயம் இந்த உலகத்தில் அற்றுப்போய்க்கொண்டிருக்கிறது. துணிகரமான பாவங்கள், அதன் விளைவு தான். கடவுள் நீதி செலுத்தும் போது, நோவா காலத்தின் வெள்ளம் போல திரும்ப சரிசெய்ய முடியாதபடி, இந்த உலகம் மாபெரும் பேரழிவை சந்திக்கும். ஆகையால் அவ்வழிவிலிருந்து நாம் தப்பிக்க, நமக்கு இரக்கம் செய்யும்படியாக காத்திருக்கின்ற பரலோக கடவுளின் இரக்கம் தேவை. அவருடைய இரக்கத்தினை அவருக்கு பயந்து வாழ்வதினாலே பெற்றுக்கொள்வோம்.

## நாம் எதற்காக காத்திருக்க வேண்டும்

**தேவனுடைய இரக்கத்தினை பெற காத்திருக்க வேண்டும்.**

தேவனுடைய இரக்கத்தினை பெற நாம் அவருக்காக காத்திருக்க வேண்டும்.

நமது தேவன் இரக்கமும் மனதுருக்கமுமானவர் என்பதை நினைவில் கொள்வோம். "கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்." **(சங்கீதம் 103:8).**

சங்கீதக்காரன் தேவனுடைய இரக்கத்தினை பெற தாம் எப்படி இருப்பதாகவும், தங்களுக்கு அந்த இரக்கம் ஏன் தேவை என்றும் தெளிவாக கூறுகிறான் "பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன். இதோ, வேலைக்காரனின் கண்கள் தங்கள் எஜமான்களின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், வேலைக்காரியின் கண்கள் தன் எஜமாட்டியின் கையை நோக்கியிருக்குமாப்போலவும், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இரக்கஞ்செய்யும் வரைக்கும், எங்கள் கண்கள் அவரை நோக்கியிருக்கிறது. எங்களுக்கு இரங்கும் கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்; நிந்தனையினால் மிகவும் நிறைந்திருக்கிறோம். சுகஜீவிகளுடைய நிந்தனையினாலும், அகங்காரிகளுடைய இகழ்ச்சியினாலும், எங்கள் ஆத்மா மிகவும் நிறைந்திருக்கிறது." **(சங்கீதம் 123:1-4).**

இந்த பயங்கரமான உலகத்தில் நாம் பாதுகாப்பாக வாழ நம்மை படைத்தவருடைய இரக்கம் நமக்கு நிச்சயம் தேவை. அவருடைய முடிவில்லா இரக்கம் நம்மை வாழவைக்கும், நம் தலைமுறையையும் வாழ வைக்கும். அவருக்கு பயந்து அவருடைய வார்த்தையின்படி வாழ்ந்து அவருடைய இரக்கத்தினை தலைமுறை தலைமுறையாக நாம் அனுபவிக்க முடியும். **யாத் 20:6** "என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்."

## தேவன் நீதி செய்யும்படி காத்திருக்க வேண்டும்

**ஏசாயா 30:18** "ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதி செய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்." நமது தேவன் நீதி செய்கின்ற தேவனாயிருக்கின்றார்.

நாம் செய்கின்ற நன்மைக்கு நமக்கு அவர்கள் தீமை செய்தாலும், பொய்யாக நம்மீது குற்றம் சுமத்தி நம்மை வெட்கப்படுத்தினாலும், நம்முடைய நம்பிக்கைக்கு அவர்கள் துரோகம் இழைத்தாலும், எது நடந்தாலும், என்னவானாலும் நாம் கலங்காதிருப்போம். ஏனெனில் நாம் நன்மையை விதைத்திருக்க நிச்சயம் நன்மையை நமது நீதியுள்ள தேவனாலே அறுப்போம். **சங்கீதம் 84:11** "தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்; கர்த்தர் கிருபையையும் மகிமையையும் அருளுவார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்."

மேலும், நமது தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகளாயிருக்கிறது. **ரோமர் 11:3** "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்!" மற்றும், நம் நீதியுள்ள தேவன் நம்மை மறந்துவிடமாட்டார். **எபி 6:10** "ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே."

தீமைக்கு தீமை செய்யாமல் நன்மை செய்வோம், தீமைக்கு பேதைகளும் நன்மைக்கு ஞானிகளுமாயிருப்போம்! நாம் அவருடைய ஜனம்; அவருடைய ஜனங்கள் வெட்கப்பட்டு போவதில்லை என அவரே சொல்லியிருக்கிறார் **(யோவேல் 2:26,27).** ஆகையால் நாம் ஏசாயா தீர்க்கனைப் போல விசுவாசமாக சொல்வோம். **ஏசாயா 50:7,** "கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார்: ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன்."

அன்பானவர்களே! நமது தேவன், அவர் நீதி செய்யும்படி, அவர் இரக்கம் செய்யும்வரை அவருக்காக காத்திருப்பவர்கள் மீது பிரியமாயிருக்கிறார். **சங்கீதம் 147:11** "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்." ஆகையால், நாம் நமது பரலோக பிதாவிற்காக காத்திருந்து, அவருக்கு பிரியமானவர்களாய் நடந்துக்கொள்வோம்.

– அன்புடன்,
**ஆசிரியர்**

# நீதி செய்கின்ற தேவன்

Baby Rajah



எனக்கு மிகவும் அன்பான சகோதரிகளுக்கு, இரக்கமுள்ள ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்திலே எனது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சாலமோன் ராஜாவை பற்றியும், அவருடைய ஞானத்தை பற்றியும் நாம் அனைவரும் நன்கு அறிந்திருப்போம். தேவன், தாவீதின் அரியணையை அவனுடைய குமாரனாகிய சாலமோனுக்கு அருளினார், மேலும், சாலமோன் கேட்ட ஞானத்தையும், கேட்காத மகிமை மற்றும் செல்வத்தையும் அவனுக்குக் கொடுத்தார். சலோமோனுடைய ஞானத்தினை கண்டு உலகமே அதிசயத்தது. சாலமோனை அரசன் என்று அழைப்பவர்களை விட, அவரை ஞானி என்று அழைப்பவர்களே அதிகமாயிருக்கின்றனர். அந்த அளவு தேவன் அவருக்கு அருளிய ஞானம் பிரசித்தி பெற்றது.

இரண்டு பெண்கள் அவரிடம் வந்து ஒரு குழந்தைக்காக சண்டையிட்டு வாக்குவாதம் செய்த போது, அந்த வழக்கை, சாலமோன் ஞானி மிகவும் நேர்த்தியாக நிதானமாக கையாண்டு நீதி செய்த விதம், இன்றளவும் வியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

அன்பான சகோதரிகளே! நமது தேவன் கொடுத்த ஞானத்தைக் கொண்டு, சாலமோன் ராஜாவால் தம்மிடம் நியாயம் கேட்டு வந்த மக்களுக்கு நீதி செய்ய முடிந்தது என்றால், எல்லா ஞானமும் நிறைந்த, ஞானத்தின் ஊற்றாகிய நமது தேவன், தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கும் **(லூக்கா 18: 7–8)**, தமக்காக காத்திருக்கிறவர்களுக்கும் **(சங் 27:14)** நீதி செய்வது எவ்வளவு நிச்சயமானது.

பெண்களாகிய நாம் தேவனை மிகவும் விசுவாசிக்கிறோம், நமது குடும்பத்திலேயே மிக விரைவிலே, தேனண்டை நெருங்கி வந்தவர்கள் நாம் தான்! அதே நேரத்தில் பிரச்சனை, போராட்டம் என்று வந்தால், நிதானம் இழந்து தேவனை விட்டு விலகி நிற்கிறவர்களும் நாம் தான்! இதை நாம் ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும். ஆண்கள் கடவுளிடம் வரவும் தாமதிக்கிறார்கள் மற்றும் விலகவும் தாமதிக்கிறார்கள். அதனால் தான் உறுதி பற்றி ஆவியானவர் சபைகளுக்கு குறிப்பிடும் போது, “புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்” என கூறுகிறார் **(1கொ 16:13).**

நமது தேவன் 'நீதியுள்நியாயதிபதி என்ற விசுவாசம் நமக்கு நிச்சயம் உண்டு. ஆகையால் என்ன வந்தாலும் அவரை இறுக்கமாக பிடித்துக்கொண்டு, இந்த ஆண்டின் ஒவ்வொரு நாட்களையும் தைரியமாக அணுகுவோம். அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறவராயிருக்கிறார் **(ஆதி 22:14)**, அவர் நமக்காக யுத்தம் செய்கிறவராயிருக்கிறார் **(யாத் 14:14):** மேலும் நமக்காக யாவற்றையும் செய்து முடிக்கிறவராகயிருக்கிறார் **(சங் 138:8).** ஆகையால், அவர் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தின்படி அவர் நீதி செய்யும் வரை அவருக்காக காத்திருப்போம். அவருக்கு காத்திருப்பவர்கள் வெட்கப்பட்டு போவதில்லை என்று வேதம் சொல்வதை மறக்க வேண்டாம். **(புல 3:25: யோவேல் 2:27: ரோமர் 10:11)**

## சிறுவருக்கான கேள்விகள்

1. சோதோம் கொமோரா நாட்டு மக்கள் எப்படி பட்டவர்களாக இருந்தனர்?

2. அவர்கள் நடுவே லோத் எவ்வாறு வாழ்ந்தார்?

3. இந்த ஆண்டிலே எப்பொழுதெல்லாம் ஜெபிக்க தீர்மானம் எடுத்துள்ளீர்கள்?

4. உழைப்பாளிக்கு கிடைத்தது என்ன?

   சோம்பேறிக்கு கிடைத்தது என்ன?

5. துன்பத்தின் மத்தியில் ஜெபித்த இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் என்ன செய்தார்?

# தொடர் 29 எபிரெயர் : ஊக்கமூட்டுதலுக்கான வார்த்தை

## தலைப்பு

எபிரேயருக்கு எழுதிய நிருபம் அதைப் பெற்றுக்கொண்டவர்களைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது. "எபிரெயர்" என்பது எபிரெய மொழி பேசும் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது, வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இது யூதக்கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது. இந்தக் கடிதத்தின் பொருளடக்கம், இது யூதப்பின்னணியைக்கொண்ட வாசகர்களுக்கான கடிதம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

## பின்னணி

இப்புத்தகத்தின் எழுத்தாளர் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளாதபடியால், இப்புத்தகத்தை யார் எழுதியிருப்பார் என்பது பற்றி கணிசமான அளவுக்கு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. லூக்கா, தீமோத்தேயு, அப்பொல்லோ, பர்னபா, சீலா, ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லாள், மற்றும் பிறர் இதை எழுதியிருக்கக்கூடும் என்று விரிவான கோட்பாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளன, ஆனால் இவைகளில் ஏதொன்றிற்கும் வரலாற்றுப் பூர்வமான ஆதாரம் எதுவும் இருப்பதில்லை. பவுல். இந்த நிருபத்தை எழுதினார் என்ற பலத்த பாரம்பரியக்கூற்று உள்ளது. தொடக்ககாலக் கல்வியாளர் ஓரிகன் என்பவர், எபிரெயருக்கு நிருபத்தை யார் எழுதினார் என்று "தேவன் மாத்திரமே நிச்சயமாக அறிவார்" என்று அடிக்கடி கூறியதாக மேற்கோள் காண்பிக்கப்படுவது உண்டு; ஆனால் ஓரிகன் தமது சக கிறிஸ்தவர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில், பவுல் தான் இதன் எழுத்தாளர் என்பதில் தமக்குச் சந்தேகம் எதுவும் இல்லை என்று சுட்டிக்காண்பித்திருந்தார். பவுலின் எழுத்து உதவியாளராகச் செயல்பட்டவர் யார் என்பது பற்றி அவரது புகழ்பெற்ற குறிப்புரை அக்கறை கொண்டிருந்தது. இந்த நிருபத்தின் பல விஷயங்கள் பவுலைப் பற்றிய நினைவூட்டுதலாக இருக்கையில், இதில் மற்ற பல விஷயங்கள் பவுலின் வழக்கமான நடையில் இருந்து மாறுபட்டவைகளாய் இருக்கன்றன என்பதே பிரச்சனையாகும். இந்தத் தொகுப்பானது பவுலினாலோ அல்லது அவரது தோழர்களில் ஒருவராலோ எழுதப்பட்டிருக்க வாய்ப்புகள் உள்ளன, ஆனால் அந்தக் கருத்துப் பற்றி ஒருவர் மிகச்சரியான முடிவுகூற இயலாது. பரிசுத்த ஆவியானவரே இதன் உண்மை எழுத்தாளர் என்பது நினைவில் வைக்கப்பட வேண்டிய முக்கிய விஷயமாக உள்ளது.

இந்தக் கடிதம் எல்லா இடங்களிலும் உள்ள யூதக்கிறிஸ்தவர்களுக்கு இது எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இதனை எழுதியவர் தனிப்பட்ட வகையில் அறிந்திருந்த கிறிஸ்தவர்களின் குழு ஒன்றிற்கு **(13:18, 19)** இது எழுதப்பட்டது. இந்தக் கிறிஸ்தவர்கள் ஒரு சபைக்குழுமத்திற்குள்ளாகவே இருந்த ஒரு சிறு பிரிவினராய் இருந்திருக்கக் கூடும் **(13:17, 24).** அவர்கள் சற்றுக்காலமாகக் கிறிஸ்தவர்களாய் இருந்திருந்தனர் (5:12; 10:32). அவர்கள் கிறிஸ்துவ வாழ்வை உற்சாகத்துடன் தொடங்கியிருந்தனர். **(6:10: 10:33, 34):** அவர்கள் விசுவாசவிலக்கம் என்ற அபாயத்தில் இருந்தனர் **(2:1 முதல்.: 6:1–6: 10:26–31).** இந்த நிருபத்தில் உள்ள விவாதவகையானது, அவர்கள் யூதத்துவத்திற்குத் திரும்பும்படி சோதிக்கப்பட்டிருந்தனர் **(10:31, 32).** இருப்பினும், அவர்கள் ஊக்கம் இழந்து போயிருந்தனர். அவர்கள் ஆராதனையில் கலந்து கொள்ளாதிருந்தனர் **(10:25).** அவர்கள் விசுவாசவிலக்கம் என்ற அபாயத்தில் இருந்தனர் **(2:1 முதல், : 6:1–6: 10:26–31).** இந்த நிருபத்தில் உள்ள விவாதவரிசையானது, அவர்கள் யூதத்துவத்திற்குத் திரும்பும்படி சோதிக்கப்பட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.

''விசேஷித்த'' என்பது இப்புத்தகத்தின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தை பன்னிரெண்டு அல்லது பதிமூன்று முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. யூதத்துவத்தைக் காட்டிலும் கிறிஸ்தவத்தில் ஒவ்வொன்றும் விசேஷித்ததாக உள்ளது என்று இதன் எழுத்தாளர் வலியுறுத்துகின்றார். நகல் எடுக்கப்பட்ட பிரசங்கம், நடைமுறை புத்திமதிகளுடன் கூடிய ஒன்றுவிட்டொன்று வரும் விவாதங்கள் வரும் விவாதங்கள் என்பதே இதன் எழுத்துநடையாக உள்ளது (வரைகுறிப்பைக் காணவும்). இதன்

எழுத்தாளர் தமது முயற்சி முழுவதையும், "புத்திமதியான வார்த்தைகள்" என்று அழைத்தார். **(13:22).** "புத்திமதி" என்பது ஒரு கிரக்கக் கூட்டு வார்த்தையில் இருந்து வருகிறது. அவ்வார்த்தையில் "உடன் அழைத்தல்" என்ற நேரடி அர்த்தம்தரும் வினைச்சொல்லும், "புத்திகூற," வேண்டுகோள் விடுக்க," "ஆறுதல் படுத்த" என்று பல்வேறு வகையில் மொழி பெயர்க்கப்படக்கூடிய வார்த்தையும் சேர்த்துள்ளன. "உற்சாக மூட்டுதல்," என்ற வார்த்தை மகிழ்விற்குரிய உடன்பாடாக உள்ளது, இது புத்தி கூறுதல் மற்றும் ஆறுதல்படுத்துதல் என்ற கருத்துக்களை ஒன்றிணைக்கிறது. எபிரெயருக்கு எழுதிய நிருபம் "உற்சாக மூட்டுதலின் வார்த்தையாக" உள்ளது.

யூதப்பலி முறைமையானது இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலகட்டத்தில் நடைமுறையில் இருந்ததென்பது உறுதியாகையால் **(9:6–10: 13:10),** இப்புத்தகம் கி.பி. 70ல் எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டிருக்கலாம்.

இப்புத்தகத்தின் விவாதங்களைப் புரிந்துகொள்வதற்கு, லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் யாத்திராகமம் ஆகிய புத்தகங்களில் வரைக்குறிப்பிடப்பட்டபடி யூதத்துவ அமைப்பு முறை பற்றிய அடிப்படை அறிவு நமக்குத் தேவைபடுகிறது.

### வரைகுறிப்பு

**I.** விவாதம்: தீர்க்கதரிசிகள் மற்றும் தூதர்கள் ஆகியோரைக் காட்டிலும் கிறிஸ்து விசேஷித்தவராக இருக்கின்றார் (1).

**II.** புத்திகூறுதல் **(2:1–4).**

**III.** விவாதம் : தூதர்கள் மற்றும் மோசே ஆகியோரைக் காட்டிலும் கிறிஸ்து விசேஷித்தவராக இருக்கின்றார் **(2:5–3:6).**

**IV.** புத்திகூறுதல் **(3:7–4:16).**

**V.** விவாதம்: கிறிஸ்து விசேஷமான ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ளார், பாகம் 1 **(5:11–6:20).**

**VI.** புத்திகூறுதல் **(5:11–6:20).**

**VII.** விவாதம் : கிறிஸ்து விசேஷமான ஆசாரியத்துவத்தைக் கொண்டுள்ளார், பாகம் 2 **(7:1–10:18).**

**VIII.** புத்திகூறுதல் **(10:19–13:25).**

### எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்

நம்மில் பெரும்பான்மையானவர்கள் யூதப் பின்னணியைக் கொண்டிராதிருப்பினும், நாம் ஊக்கம் குன்றியவர்களாகி வாழ்வின் பழைய வழிக்குத் திரும்பும்படி சோதிக்கப்படுகின்றோம். எபிரெயருக்கு எழுதிய நிருபமானது, நம் யாவருக்கும் வல்லமை நிறைந்த செய்தியைக் கொண்டுள்ளது: உலகமானது கிறிஸ்துவைக் காட்டிலும் மேன்மையான எதையுமே அளிக்க இயலாது!

இயேசுவை நமது பிரதான ஆசாரியராக முன்வைக்கும் புதிய ஏற்பாட்டுப் புத்தகம் இது ஒன்றே. இப்புத்தகத்தில் அவர் பத்துமுறை "பிரதான ஆசாரியர்" என்றும் மற்ற முறைகள் "ஆசாரியர்" என்றும் குறிப்பிடப்படுகின்றார். **4:14–16** வசனங்கள் திறவுகோல் வசனங்களாகும். இயேசு நமது பிரதான ஆசாரியராக இருப்பதால், நாம் தேவனுடைய கிருபாசனத்தைத் தைரியமாய்க் கிட்டிச்சேர முடியும்!

நீங்கள் இந்த நிருபத்தைப் படிக்கையில், பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள் தொடர்ந்து குறிப்பிடப்படுவதை, விசேஷமாக 8–10 அதிகாரங்களில் அவ்வாறு குறிப்பிடப்படுவதைக் கவனியுங்கள். எவரொருவரும் தங்கள் மதரீதியான நடைமுறைக்குப் பழைய ஏற்பாட்டிற்குத் திரும்பும்படி விரும்ப வேண்டியதென்ன?

**5:11–14ல்** இந்த நிருபத்தைப் பெற்றுக் கொண்டவர்களின் அடிப்படைப் பிரச்சனை சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. "புத்திகூறுதலின்" பெரும்பான்மையான பகுதியானது படர்க்கைப் பெயரிலுள்ளது, ஆனால் இந்தப் பகுதி நேரடியாக முன்னிலைப் பெயரில் உள்ளது: "நீங்கள் கேள்வியில் மந்த முள்ளவர்களானபடியால்" **(வசனம் 11).** இந்தக் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் வளரத் தவறியிருந்தனர்; அவர்கள் கிறிஸ்துவுக்குள் பக்குவமடையத் தவறியிருந்தனர். நம்மில் எத்தனைபேர், பல ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்களாய் இருந்தும், இன்னமும் ஆவிக்குரிய வகையில் குழந்தையாகவே இருந்து வருகின்றோம்.

# பாடம் : 7– இயேசு கிறிஸ்துவின் தன்மையும் – முன் இருத்தலும் நித்திய நோக்கமும்

**முன்னுரை :**

கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து மானிட ஜாதியின் ஒவ்வொரு தலைமுறையும் இயேசு கிறிஸ்து உலகத்துக்கு வந்ததையும், அசாதாரண வாழ்க்கையும், பிரமிக்கச் செய்யும் செயல்களையும், ஜொலிக்கும் ஞானத்தையும், மிகச் கொடீர மரணத்தையும் எப்படி விஸ்தரிப்பது என்று திகைத்திருக்கிறது. ஒரு சிலர் அவரை ஓர் சிறப்புக்குரிய மகான் என்ற போதிலும், அவர் ஒரு மனிதனே என்கிறார்கள். இன்னும் சிலர் அவரை ஒரு தீர்க்கதரிசி என்றும், மரித்தோரிலிருந்து எழுந்த யோவான் ஸ்நானகன் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மற்றவர்கள் அவரைத் தேவசுதன், ஆதலால் தேவனே என்றும் நம்புகிறார்கள்.

இந்த விளக்கங்கள் யாவும் சரியானவையாயிருக்க முடியாது என்பது தெளிவு. இதைப்பற்றி வேதாகமம் என்ன சொல்லிகிறதென்பதைப் பார்ப்போம்.

நாம் யோவான் ஸ்நானகனுடைய ஜீவியத்தையும் பிரசங்கத்தையும், ஸ்நானத்தையும் பற்றி முன் படித்த பொழுது யோவான் உலகத்தில் பிறந்ததின் நோக்கம், இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு வழியை ஆயத்தம் பண்ணவே என்று கண்டோம்; இந்தத் தோரணையில் யோவான் வருவதை பழைய ஏற்பாட்டின் இரு தீர்க்க தரிசிகள், ஏசாயாவும் மல்கியாவும் தீர்க்க தரிசனமாக முன் உரைத்திருக்கின்றனர் என்பதையும் படித்தோம்.

யோவானும் இயேசுவும் அவர்களுடைய தாய்மார் அவர்களை சிசுக்களாக கர்ப்பத்தில் சமந்து கொண்டிருக்கும் பொழுதே, இயேசுவின் தாயாகிய மரியாள் யோவானின் தாயாகிய எலிசபேத்தை சந்திக்க வந்த பொழுது, எலிசபேத்தின் கர்ப்பத்திலிருந்த யோவான் மகிழ்ச்சியினால் துள்ளினான் என்றும் படித்தோம். பிறகு மனித பருவம் அடைந்தவுடன் யோவான் யூதேயா வனாந்தரத்தில் "கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ணுங்கள். அவருக்குப் பாதைகளை செவ்வை பண்ணுங்கள்" என்று பிரசங்கம் செய்து கொண்டு வந்தான் என்றும் படித்தோம் **(மத்தேயு 3:3).** தன்னைத் தாழ்த்திக்கொண்டு யோவான் நான் உங்களுக்கு மனந்திரும்புதலுக்கென்று தண்ணீரினால் ஞானஸ் வல்லவராயிருக்கிறார். அவருடைய பாதரட்சைகளை சுமக்க நான் பாத்திரனல்ல" என்றான். **(மத்தேயு 3:11).** அவரைக் குறித்து அவன் சாட்சி கொடுத்து : எனக்குப்பின் வருகிறவர் எனக்கு மன்னிருந்தவர் ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்றான். **(யோவான் 1:15, 30).** அவர் பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்றான் **யோவான் 3:30).**

யோவான் பிறந்து ஆறு மாதம் சென்றபின் பிறந்த இயேசு எப்படி யோவானுக்கு முன் இருந்திருக்க முடியும்? இதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், நாம் கவனிக்க வேண்டியது.

## I. இயேசு கிறிஸ்து பெருமானின் தன்மை

குறிப்பு : இயேசுவை மனுஷீகத்தில் மாத்திரம் பார்க்கிறவர்கள் வேதாகமம் அவரைக்குறித்து உரிமை கொண்டாடுவதில் இடறலடை கிறார்கள்.

அ. புதிய ஏற்பாடு இயேசுகிறிஸ்து பெருமானை மனுஷீகத்துக்கு மேலானவராகக் காட்டுகிறது.

1. இயேசுவே தாம் தேவனோடு ஒன்றித்திருப்பதைப் பற்றி உரிமை கொண்டாடினார்

a. **யோவான் 10:30** ''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்றார்.

b. **யோவான் 14:10–11–இல்** "நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறார்" என்றார்.

c. அவர் நமக்காக பரிந்து பேசுகிறவராய் ஜெபிக்கும் ஜெபத்தில் ''பரிசுத்த பிதாவே நீர் எனக்குத்தந்தவர்கள். நம்மைபோல ஒன்றாய் இருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொள்ளும்" **(யோவான் 17:11)** என்றார்.

அதே ஜெபத்தில் இயேசு மேலும் ஜெபித்ததாவது :

''நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்கிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன்.

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன்.

–தொடரும்...

பொதுவான செய்திகள்

## வேற்றுமையில் ஒற்றுமை – திருக்குறள்

தமிழ்மொழியின் சிறப்பினைப் பற்றி கூறிட வார்த்தைகள் போதாது. வாழ்ந்து பார்த்தால் தான் உணர்ந்திட முடியும். அத்தகைய வாழ்வினை சிறப்பாக வாழ்ந்திடவும், வாழ்வின் பொருளுணர்ந்து செயல்படவும் வள்ளுவன் தனது நூலில் இயற்றிய குறள், பொருட்பாலில் பெருமை என்னும் அதிகாரத்தில் உள்ள

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்மையான்,

**குறளின் சிறப்பு:**

பிறப்பு என்பது எல்லா உயிர்களுக்கும் சமமான ஒன்று. எனவே, அவரவர் செய்கின்ற தொழில் வேறுபட்டாலும், ஏற்றத்தாழ்வுகளால் சிறப்பென்று கூறயியலாது.

**உணர்த்தும் செய்தி:**

மனித உடலில் பாயும் குருதியும், நிறமும், துன்பம் வருகின்ற போது விழிகளில் ஓடும் கண்ணீரின் சுவையும் யாவருக்கும் ஒன்றுதான்.

இதில் வேறுபாடு உள்ளதென்று எவரேனும் கூற இயலுமா? இல்லை. ஏனெனில் இதனை மறுப்பதற்கான சான்று எவரிடத்தும் இல்லை.

இவ்வுண்மையை வள்ளுவன் தன் குறட்பா மூலமாக, மனிதர்கள் தங்களது தொழிலால் வேற்மையடைந்து காணப்பட்டாலும், பிறப்பால் சமமானவர்கள் தான்; தொழிற்காரணமாக சிறப்பியல் பினை அவர்கள் எய்திட முடியாது என்று கூறியுள்ளார்.

நாம் பெற்றிருக்கும் பெருமையை வாழ்நாளில் கண்டு களிப்பது தற்பெருமையாகி விடும்; நமது மறைவிற்கு பிறகும் நம் பெருமையை நிலை நாட்டுவதே, நிலையான பெருமை.

"உயிர்களிடத்தில் அன்புகொள்வோம் ; வேற்றுமை இயல்பினை வேரறுப்போம்"

நாம் அனைவரும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு". "வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் அனைவரும் ஒன்றாககைகோர்த்திடுவோம்."

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV : Every Sunday 3.30 p.m.***

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# தேவன் நீதியுள்ள நியாயாதிபதி

சிறுவர் பகுதி

கடவுளின் செல்லங்களா! எல்லாருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இந்த வருடம் கர்த்தர் உங்களை பாதுகாத்து, ஆசீர்வதித்து, எல்லா நற்காரியங்களிலும் வழி நடத்துவாராக!

இப்பொழுது ஒரு பைபிள் சம்பவத்திலிருந்து சூப்பரான ஒரு செய்தியைக் கற்றுக்கொள்ளலாமா?

பிள்ளைகளா! தேவன் தவறு செய்பவர்களை தண்டிப்பார், நல்லது செய்பவர்களை காப்பாற்றுவார்.

முன்பு ஒரு காலத்தில், ஆபிரகாமின் நாட்களில், சோதோம் கொமோரா என்ற பட்டணங்கள் மிகவும் செழிப்புள்ளதாக இருந்தது. ஆபிரகாமின் சகோதரனின் மகனான லோத், தன் மனைவி பிள்ளைகளுடன் அங்கே குடியிருந்தார். அந்த பட்டணங்களின் மக்கள் கடவுளுக்கு விரோதமான பாவம் செய்து மிகவும் மோசமான வாழ்க்கை வாழ்ந்துக்கொண்டிருந்தனர். பாருங்க ஒருத்தர் கூட தேவனுக்கு பிரியமாக ஒழுக்கமான வாழ்க்கை வாழவில்லை. ஆயினும் இவ்வளவு கீழ்படியாத மக்கள் மத்தியில், ஒருவர் நீதிமானாக வாழ்ந்தார். அவர் யாரு தெரியுமா? அவர் தான் லோத்து. தேவனுக்கு பிரியமாக வாழ்ந்தார், பரிசுத்தமாக வாழ்ந்தார், நீதியாய் நடந்தார், உண்மையாய் இருந்தார்.



பிள்ளைகளா! நாம் கூட, உலகத்தில் யாரும் நல்லவங்களாக இல்லை. நான் மாத்திரம் ஏன் நல்லவனாக, நல்லவளாக வாழனும் என்று நினைக்க வேண்டாம். யார் கெட்டவங்களா இருந்தாலும், நாம் நல்லவங்களாகவே வாழனும் என்பதற்கு லோத்து அருமையான உதாரணம்.

சோதோம் கொமோரா பட்டணங்களின் மக்கள், லோத்தை பார்த்துக் கூட திருந்தவில்லை. தங்கள் பாவ வாழ்க்கையில் தொடர்ந்து நிலைத்து இருந்தனர். திருந்தாத அவர்கள் மீது நமது தேவனுக்கு கோபம் வந்தது. அதினால் அந்த பட்டணங்கள் முழுவதையும் நெருப்பினால் அழித்துப்போட்டார். அங்கே வாழ்ந்த அனைவரும் அழிந்துப்போனார்கள். ஆனால் லோத்து நீதியாய் வாழ்ந்ததினால் தேவன் அவனையும் அவன் குடும்பத்தினையும் காப்பாற்றினார் (அவன் மனைவியைத் தவிர).

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளா! நீங்களும் உங்கள் வீட்டில், பள்ளியில், உங்கள் சபையில், நான் தேவனுடைய பிள்ளை, இப்படிதான் இருப்பேன் என்று உண்மையாக, ஒழுக்கமாக, பெற்றோருக்கு கீழ்படிந்து, தேவனுக்கு பயந்து நல்ல பிள்ளைகளாக வாழ்ந்தால் கடவுள் உங்களையும் காப்பாற்றுவார். வாழ்வீர்களா? தேவன் உங்களை பாதுகாப்பாராக.

**மனப்பாட வசனம் : சங்கீதம் – 7:11**

"தேவன் நீதியுள்ள நியாயதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்."

**– அன்பு ஏசுதாஸ்**

# தேவன் நீதி செய்பவர்

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஒரு ஊரிலே நியாயதிபதி (நீதிபதி) ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தேவனுக்கு பயப்படாமல், மனுஷர்களை மதிக்காமல், இரக்கமற்றவனாக மிகவும் மோசமானவனாக இருந்தான். அந்த ஊரிலே ஒரு விதவை இருந்தாள்.

அந்த விதவை, நியாயமற்ற நீதிபதியினிடத்தில் போய், ஐயா! நீங்கள் என்னுடைய வழக்கை கேட்டு, எனக்கும் எதிராளிக்கும் இருக்கிற பிரச்சனையை தீர்த்து, நியாயம் செய்யுங்கள் என்று கெஞ்சினாள். அந்த நீதிபதியோ, 'அதெல்லாம் முடியாது, போ என அவளை துரத்திவிட்டான்.

ஆனாலும் அந்த விதவை, தினமும் அந்த நீதிபதியினிடத்தில் போய், தனக்கு நியாயம் செய்ய வேண்டும் என கேட்பதை நிறுத்தவே இல்லை. ஒருநாள் அவளது தொந்தரவு தாங்காமல், அந்த நீதிபதி, நான் கடவுளுக்கு பயப்படாமல், மனிதரை மதிக்காமலிருந்தும், இந்த விதவை ஓயாமல் வந்து என்னை தொந்தரவு செய்கிறாள். இவள் வழக்கை

விசாரித்து இவளுக்கு நியாயம் செய்ய வேண்டும் என தன் மனதிலே எண்ணினார்.

குட்டீஸ், மிகவும் கெட்ட அந்த நீதிபதி, தன்னிடம் தொடர்ந்து உதவி செய்யும்படி நீதி கேட்ட அந்த விதவை பெண்ணுக்கு, உதவி செய்ய இரங்கினார் என்றால்; மிகவும் நல்லவரும், நன்மை செய்கிறவரும், இரக்கமுள்ளவரும், அன்புள்ளவருமாகிய நாம் வணங்குகிற இந்த பரலோக கடவுள், அவரை நோக்கி ஜெபிக்கிற நமக்கு உதவி செய்வது எவ்வளவு நிச்சயம்! பைபிள், இடைவிடாமல், சோர்ந்து போகாமல் ஜெபம் செய்யுங்கள் என்கிறது. ஆகையால் இந்த புதிய ஆண்டிலே, காலையில் எழுந்தவுடன், இரவிலே தூங்கு முன், உணவு உண்ணும் முன்பு, ஏதாவது காரியங்களை செய்யும் முன்பு, ஜெபித்து தேவனுடைய உதவியை கேட்போம். அவர், தம்மை நோக்கி வேண்டுதல் (ஜெபம்) செய்கிறவர்களுக்கு உதவி செய்கிற தேவன். நமக்கும் உதவி செய்வார்! நீங்க செய்வீங்க தானே? அப்படி செய்து தேவனுடைய பாதுகாப்பை பெற்றுக்கொள்வோம்.

**மனைவசனம் : மத்தேயு 21:22** "மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்."

**– குயினி பிரதீப்**

# சிறுவர் பகுதி — உழைப்பாளியா? சோம்பேறியா?

அன்பான மழலை செல்லங்களுக்கு, ஆண்டவர் இயேசுவின் பெயரால் இந்த அக்காவின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

ஆண்டவர் இயேசு சொன்ன ஒரு உவமையிலிருந்து ஒரு அருமையான காரியத்தை நாம் கற்றுக்கொள்வோமா?

முதலாளி ஒருவர் வெளிநாடு பயணம் செல்ல விரும்பினார். தன்னுடைய சொத்துக்களை தன்னிடம் வேலைபார்க்கின்ற திறமையுள்ள மூன்று வேலைக்காரர்களுக்கு, அவரவர்களுடைய திறமைக்கேற்ப பகிர்ந்துக்கொடுத்து, அவர்கள் மூலமாய் பராமரித்து, பாதுகாக்க விரும்பினார்.



முதலாவது வேலைக்காரனிடம் ஐந்து தாலந்தை கொடுத்தார்; இரண்டாவது வேலைக்காரனிடம் இரண்டு தாலந்தை கொடுத்தார்; மூன்றாவது வேலைக்காரனிடம் ஒரு தாலந்தை கொடுத்தார்.

ஐந்து தாலந்தை வாங்கின வேலைக்காரன், அதை பயன்படுத்தி மேலும் ஐந்து தாலந்தை சம்பாதித்தான். இரண்டு வாங்கின வேலைக்காரன், அதை பயன்படுத்தி மேலும் இரண்டு தாலந்தை சம்பாதித்தான். ஆனால், ஒரு தாலந்தை பெற்ற வேலைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? தன்னுடைய திறமையை பயன்படுத்தி அதை இரண்டாக்காமல், சோம்பேறித்தனமாக, 'முதலாளி இல்லையே எதுக்கு வேலைபார்த்துகிட்டு' என்று, அந்த ஒரு தாலந்தினை மண்ணுக்குள் புதைத்து வைத்தான்.

ரொம்ப நாட்களுக்கு பிறகு முதலாளி மறுபடியும் திரும்பி வந்து, தனது வேலைக்காரர்கள் மூவரையும் அழைத்தார். முதலாவது வேலைக்காரன் தனது உழைப்பின் பலனை கொண்டுவந்து கொடுத்தான். முதலாளி அவனை உண்மையுள்ளவன் என பாராட்டி ஆசீர்வதித்தான். இரண்டாவது வேலைக்காரன் தனது உழைப்பின் பலனை கொண்டுவந்து கொடுத்தான். அவனையும் முதலாளி உண்மையுள்ளவன் என பாராட்டி ஆசீர்வதித்தான். மூன்றாவது லேலைக்காரன் தனது திறமையையும், தாலந்தையும் பயன்படுத்தாமல் சோம்பேறியாக இருந்ததால், முதலாளி அவனை தண்டித்தார்.

செல்லங்களே! தேவன், மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக திறமைகளை கொடுத்திருக்கிறார். அதை கடவுளுடைய நாமம் மகிமைப்படும்படி பயன்படுத்தினால், நாமும் கடவுளால் பாராட்டும், ஆசீர்வாதமும் பெறுவோம். ஒரு தாலந்தை வாங்கினவனைப் போல சும்மா இருந்தால் தண்டிக்கப்படுவோம். உங்களுக்கு கடவுள் கொடுத்த திறமை என்ன? அதை எப்படி இந்த ஆண்டிலே பயன்படுத்தலாம் என்பதை யோசித்து, தீர்மானித்து, செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மனைவசனம் : நீதிமொழி 10:4** "சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்."

**– பிரியா ஆண்டனி**

# தேவன் விடுவிப்பார்

சிறுவர் பகுதி

ஹலோ குட்டீஸ், எப்படி இருக்கீங்க? நீங்கள் அனைவரும் நன்றாக இருக்க நாங்கள் ஜெபிக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எனது அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

குட்டீஸ், நமது தேவன் மிகவும் நீதியுள்ளவர் மற்றும் இரக்கமுள்ளவர். அவருடைய மக்கள் தவறு செய்தால் தண்டிப்பார் மற்றும் கஷ்டப்பட்டால் உதவியும் செய்வார். அப்படி கஷ்டப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் உதவி செய்த ஒரு சம்பவத்தை நாம் தெரிந்துக்கொள்வோமா?

யாக்கோபின் நாட்களில் பஞ்சம் ஏற்பட்ட போது, அவர்கள் அனைவரும் கானான் நாட்டை விட்டு எகிப்திற்கு சென்றனர். அங்கே யோசேப்பு பெரிய அதிகாரியாக இருந்தப்படியினால், அவர்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தனர். ஏறக்குறைய 430 ஆண்டுகள் அங்கே இருந்தனர். அப்பொழுது அந்த நாட்டிலே யோசேப்பைப் பற்றி அறியாத ராஜா ஆண்டார். அவர் மிகவும் கடினமாய் இஸ்ரவேல் மக்களை துன்பப்படுத்தி, வேலை வாங்கி, அவர்களை அடிமையாக நடத்தி, கொடுமைப்படுத்தினார்.

இஸ்ரவேல் மக்களுக்கு பிறக்கின்ற ஆண்பிள்ளைகளை எல்லாம் கொல்லச் சொன்னார். செங்கல் தயாரிக்க தேவையான பொருட்களை தராமல், அவர்களையே பொருட்களைத் தேடி தயார் செய்யுங்கள்; தினமும் செய்கின்ற அளவு குறைக்கூடாது என்றார். இஸ்ரவேல் மக்கள், அரசனிடம் முறையிட்டு எந்த பயனும் இல்லை என்பதை உணர்ந்தனர். அதனால் அவர்கள் தங்கள் மூதாதையர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு வழிபட்ட பரலோக கடவுளை நோக்கி முறையிட்டார்கள்.

தமது மக்களின் வேதனை மற்றும் கண்ணீரை கண்ட தேவன், அவர்களை, மோசேயை அனுப்பி, அற்புதமாக காப்பாற்றினார். அவர்களை கொடுமைப்படுத்தின எகிப்தின் ராஜா பார்வோனையும், அவனது ராணுவத்தினரையும் மற்றும் மக்களையும் கடுமையாய் தண்டித்தார். ஏனெனில் அவர்கள் தங்கள் அதிகாரத்தினை பயன்படுத்தி, எளிய மக்களை கொடுமைப்படுத்தினார்கள்.

பார்த்திங்களா குட்டீஸ்! உங்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் உங்கள் அப்பா அம்மா சும்மா இருப்பாங்களா? நிச்சயம் இல்லை! உங்களை அந்த கஷ்டத்திலிருந்து எப்படியாவாது காப்பாற்றுவார்கள். நம்மை படைத்து, நம்மீது அன்பு வைத்திருக்கின்ற பரலோக கடவுளும், நம்மை மற்றவர்கள் அநியாயமாய் துன்பப்படுத்தினால் பொறுத்துக்கொள்ள மாட்டார்.



நிச்சயம் நம்மை காப்பாற்றுவார்! நாம் நமது கஷ்டத்தை அவரிடம் சொல்லிவிட்டு, அவருக்காக காத்திருக்க வேண்டும். அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்.

**மனப்பாட வசனம் : சங்கீதம் 34:17** "நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்."

**– பெவர்லி கிங்ஸ்லி**

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. ஸ்ரீ நிதி – கரூர்
2. லக்ஷிதா – கரூர்
3. கனிஸ்கா – கரூர்
4. தீக்ஷன் – கரூர்
5. M. ஜோனாத்தான் – கரூர்
6. M. ராஜா – கரூர்
7. செந்தில் குமார் – கரூர்
8. K. டொரிஷா கிரேஸ் – கோபி
9. K. அபிஷ்கா – கோபி
10. G. யஷாந்தினி – இலங்கை

## ஜனவரி மாதக் கேள்விகள்

1. "தமக்கு பயந்து, தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் எப்படியிருக்கிறார்?

2. தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளை அதிக நிச்சயமாக கொடுப்பவர் யார்?

3. யாருக்காக காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள் என ஏசாயா சொல்கிறார்?

4. தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல இரங்குகிறவர் யார்?

5. தீமையை வெறுத்து எதை பற்றிக் கொண்டிருக்க வேண்டும்?

6. தேவனாகிய கர்த்தர் யாருக்கு ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறேன் என்கிறார்?

7. கர்த்தருக்கு காத்திருந்தால் அவர் நம் இருதயத்தை என்ன செய்வார்?

8. யார் வெட்கபடுவதில்லை என்று வேதம் சொல்கிறது என பவுல் கூறுகிறார்?

9. ஏசாயா தன் முகத்தை கற்பாறையை போலாக்கியது ஏன்?

10. நமது அன்புள்ள பிரயாசத்தை மறந்துவிட தேவன் யார் அல்ல?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-02-2020**

**அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. பேபி ராஜா**
**45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,**
**அரசரடி, மதுரை - 625 016**
**செல்: 92 4421 4421, 92 4431 4431**

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 6:13 | 6. நீதி 16:32 |
| 2. I பேதுரு 4:19 | 7. ரோமர் 12:1 |
| 3. தாணி 3:17,18 | 8. I தீமோ 1:2 |
| 4. I கொரி 9:25 | 9. கலா 5:24 |
| 5. நியாதிபதி 4:8 | 10. லூக்கா 23:46 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. M. ஈஸ்வரி - கரூர்
2. Mrs. ஹெலன் திலக் - மதுரை
3. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
4. Mrs. லில்லி ஆல்பர்ட் - நெல்லை
5. Mrs. ராணி முத்துக்குமரன் - கரூர்
6. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் - மதுரை
7. Mr. ஆனந்த கதிரோன் - சென்னை
8. Mrs. சரோஜா - தென்கலம்
9. P. வசந்த் - குன்னூர்
10. Mrs. சுகந்தி ஜோன்ஸ் - சேலம்
11. J. ஜான்சி - ஆனைமலை
12. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
13. Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
14. Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
15. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
16. Mrs. அன்பு சுதந்திரம் - நெல்லை
17. Mrs. தெபோராள் ஸ்டீபன் - சேலம்
18. Mrs. மேரி ராஜ் - மதுரை
19. Mrs. ஹெப்சிபா தாமஸ் - படப்பை
20. Mrs. அன்னதாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
21. Mr. G. பீற்றர் பால்ராஜ் - ஆறுமுகநேரி
22. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
23. Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
24. A. ரோஸ்மேரி - சென்னை
25. Mrs. பாக்கியராஜம் - மதுரை
26. Mrs. ராணி சாந்தகுமார் - மதுரை
27. Mr. டேவிட் சாந்தகுமார் - நெல்லை
28. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
29. Mr. P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
30. S. ஜெயராஜ் - கோவை
31. Dr. D.S. ஜெபநேசன் - திண்டுக்கல்
32. P. இந்திரா பாண்டி - திருமங்கலம்
33. P. சூரிய பிரியா - திருமங்கலம்
34. J. விஜய் - மதுரை
35. S. கேத்ரின் அருள்நேசம் - மதுரை
36. பூர்ணிமா - கோபி
37. A. கனகநாதன் - கோபி
38. A. தேவராணி - கோபி
39. N. சதர்ஷனி - இலங்கை
40. N. மேனன் அபிலால் - இலங்கை
41. A. ஜோதிமலர் - இலங்கை
42. B. ஸ்ரீ கரன் - இலங்கை
43. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
43. Mrs. ரேச்சல் தமிழரசி - மதுரை
44. Mrs. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

# சென்ற மாத ஊழியங்கள்




அரக்கோணம் வின்டர்பேட் கிறிஸ்துவின் சபையில் நடைபெற்ற ஆண்டு கூட்டத்தில் நமது ஆசிரியர் செய்தியளித்த போது...




மதுரை மாவட்டம், மேலூரில் புதிதாக ஆரம்பிக்கப்ட்ட கிறிஸ்துவின் சபையின் முதல் தொழுகையில் நமது ஆசிரியர் செய்தியளித்த போது...




மதுரையில் நடைபெற்ற ஆண்டு இறுதி கூட்டத்தில் நமது ஆசிரியர் செய்தியளித்த போது






இந்த ஆண்டும் 100 பார்வையற்றோர் குடும்பத்தினருக்கும் மற்றும். ஏழை விதவைகளுக்கும் புத்தாடையும் 10 கிலோ அரிசியும் கொடுக்கப்பட்டுள்ளது.






மதுரை மற்றும் திருச்சியில் திருமுழுக்கிலே வசனத்திற்கு கீழ்படிந்த பார்வையற்ற சகோதர சகோதரிகள்

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th January 2020
Posted at Arasaradi HPO on 14 th January 2020


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்











அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்







## கைபிரதிகள்








உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


**If undelivered please return to :**

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers